ශ්‍රී ලංකා අග්‍රාමාත්‍ය

இலங்கையின் பிரதம அமைச்சர்

**Prime Minister of Sri Lanka**

## சுதந்திர தினச் செய்தி

பிரித்தானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற 75 ஆவது ஆண்டுப் பூர்த்தி எனும் மிக முக்கியமான மைல்கல்லினை இன்றைய தினம் கொண்டாடுகிறோம்.

எம்மில் பெரும்பாலானோர் சுதந்திர இலங்கையினுள் பிறந்தோம் என்ற நற்பேறினைப் பிரகடனப்படுத்தும் வகையில் இந்த சந்தர்ப்பம் கொண்டாடப்படுவதுடன், இந்த முக்கியமான மைல்கல்லினை நினைவுபடுத்தும் வகையில் எமது தேசிய கொடியை ஏற்றுவதற்குக் கிடைத்தமை பற்றிப் பெருமையடைகிறோம். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆந் திகதிக்கு முன்பு பிறந்து பிரித்தானிய ஆட்சியின் கீழ் வாழ்ந்தவர்கள் அனுபவித்த கசப்பான வேதனைகள் மற்றும் எமக்காக சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக எமது முன்னோர்கள் முன்னெடுத்துச் சென்ற போராட்டங்கள் தொடர்பாகவும் நினைவுபடுத்துவதற்குரிய சந்தர்ப்பமாக இது காணப்படுகிறது.

1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆந் திகதி எனும் சோகமயமான தினத்தில் அடிபணியும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு சில மணித்தியாலங்களுக்கு முன்பு பிரித்தானியக் கொடி ஏற்றப்பட்ட சந்தர்ப்பத்தில், அது வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரர் அவர்களினால் அகற்றப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இலங்கையினுள் வெளிநாட்டு ஆதிக்கத்தை வெறுத்து அதனை எதிர்த்து நிற்கின்ற உயிர்ப்புச் சக்தியும் தோற்றம் பெற்று விட்டது எனலாம்.

இன்றைய தினம் எம்மால் எமது சுதந்திரம் கொண்டாடப்படுவது மாத்திரமன்றி அதற்காகப் போராடியவர்கள், எமது நாட்டைப் பற்றிய தூரநோக்குடன் செயற்பட்டவர்கள் மற்றும் அதற்காக உயிர்களைத் தியாகம் செய்தவர்களுக்கும் நாம் மரியாதை செலுத்துகிறோம். தாய்நாட்டின் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் எமது முன்னோர்கள் வெளிப்படுத்திய துணிச்சல் மற்றும் வீரச் செயல்களைப் போன்றே அவர்கள் அனுபவித்த இன்னல்களையும் நாம் மறந்து விடக் கூடாது.

1818 ஆம் ஆண்டு ஊவா வெல்லஸ்ஸ மற்றும் 1848 ஆம் ஆண்டு மாத்தளையில் ஏற்பட்ட பாரிய கிளர்ச்சிகளின் ஊடாக அவர்கள் செய்த பாரிய அர்ப்பணிப்புக்கள் மற்றும் அனுபவித்த எண்ணிலடங்காத இன்னல்கள் வெளிப்படுத்தப்படுவதுடன், கடந்த நூற்றாண்டில் அகிம்சை வழியிலான சுதந்திரப் போராட்டமொன்றும் இடம்பெற்றது. அநாகரிக தர்மபால, டீ.பீ. ஜயதிலக்க, எப்.ஆர். மற்றும் டீ.எஸ். சேனாநாயக்க, ஹென்றி பேதிரிஸ், ரீ.பீ. ஜாயா, பொன்னம்பலம் இராமநாதன், என்.எம். பெரேரா, பிலிப் குணவர்தன, எஸ்.ஏ. விக்கிரமசிங்க போன்ற தலைவர்கள் முதல் வேறு பலர் வரையான தலைவர்களினால் சுதந்திர இயக்கம் வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த 75 வருட காலத்தினுள் தீவிரவாதிகளிடமிருந்தும், பிரிவினைவாதிகளிடமிருந்தும் இவ்வாறான கஷ்டங்களுடன் வெற்றிகொண்ட சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக அதனையொத்த அர்ப்பணிப்புக்களைச் செய்த வீரம் மிகுந்த இராணுவப் படையினரையும் நாம் போற்றிப் புகழ வேண்டும்.

வீழ்ச்சிக்கு வழிவகுக்கின்ற இயல்புடைய பல சவால்களை எமது நாடு எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது. தன்னிறைவு மற்றும் உணவுப் பாதுகாப்பினை அடைந்துகொள்வதற்காக கமத்தொழில் உற்பத்திகளை விருத்தி செய்வதுடன், பொருளாதாரத்தை இயல்பு நிலைக்கு மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு மிகுந்த நோக்குடன் அரசாங்கத்தினால் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சவால்களை வெற்றிகொண்டு, சிறந்த பொருளாதாரத்தைக் கொண்ட முற்போக்கான நாடொன்றைக் கட்டியெழுப்புவதே எமது கடுமையான அபிலாசையாகக் காணப்படுகிறது.

இந்த நாட்டின் பெருமை மிகுந்த பிரஜைகள் என்ற வகையில், ஒன்றிணைந்து செயற்பட்டு எமது நாட்டினுள் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி மிகுந்த மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான கடமையினைத் தூய எண்ணத்துடன் நிறைவேற்றுவது எமது பொறுப்பாகும்.

சுதந்திரத்தை வென்றெடுப்பதற்காக எமது முன்னோர்கள் செய்த அர்ப்பணிப்புக்களை உள்ளங்களில் நினைவுகூர்ந்து, எமது தாய்நாட்டிற்கு மிகவும் சிறந்த எதிர்காலமொன்றை உருவாக்குவோம் என நாம் சபதமேற்க வேண்டியுள்ளது.

**தினேஷ் குணவர்தன**
இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பிரதம அமைச்சர்

2023.01.16